# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | STC.209/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | நீ.ம.சா.1 |
| Name : | M.வேல்முருகன், இளநிலை பொறியாளர் |
| Father's/Husband Name: | |
| Village : | திருநெல்வேலி |
| Taluk : | திருநெல்வேலி |
| Age : | 47 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 27.11.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரி பிரபு ஆஜர்)**

**முதல் விசாரணை**

(i) நான் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சிம் அளிக்க வந்துள்ளேன். தற்போது திருச்சியில் பெரிய மிளகு பாறையில் இளநிலை பொறியாளராக பணிபுரிகிறேன். நான் ஆய்வு செய்ததில் எதிரி பிரபு கிரேடு–2 போர்மேனாக 2014 ம் வருடம் பணிபுரிந்து இருக்கிறார். 15.10.2016 அன்று எதிரி பிரபு தங்கள் அலுவலகத்தில் பணிபுரிந்தாரா என்றால் வருகை பதிவேடு ஆவணத்தின் படி பணிபுரிந்துள்ளார். அன்றை தேதியில் அவர் அனுமதி பெற்று வெளியே எங்கேயும் சென்றாரா என்றால் இல்லை. அவ்வாறு சென்றால் வருகை பதிவேட்டில் குறிப்பு இருக்கும். 15.10.2016 தேதியன்று எதிரி பிரபு அனுமதி பெற்றதாக எந்த குறிப்பும் இல்லை. மேற்படி வருகை பதிவேட்டின் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான சான்றிட்ட நகலை (அது **நீ.ம.சா.ஆ.1(எண்ணிக்கை 3)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) மேற்படி தேதியில் எதிரி பிரபு கிரேடு 2 போர்மேனாக இருப்பதால் அலுவலக வளாகத்தில் வேலை பார்ப்பாரா அல்லது வெளியே சென்று வேலை பார்ப்பாரா என்றால் அலுவலக வளாகத்தில் உள்ளே மட்டும் வேலை பார்ப்பார். திருச்சி பொன்மலையில் மின்சார வாரி அலுவலகமும்

கிடையாது மின்சார வாரிய குடியிருப்பும் கிடையாது. குடியிருப்பு பெரிய மிளகு பாறையில் மட்டும் தான் உள்ளது.

<u>**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

திருச்சி அலுவலகத்தில் எவ்வளவு நாட்கள் பணிபுரிந்தேன் என்றால் 21.08.2013 முதல் பணியாற்றி வந்தேன். பணி நேரத்தை தவிர்த்து மற்ற நேரங்களில் பணியிடத்திலிருந்து வெளியே செல்ல முன்அனுமதி எதுவும் பெற தேவையில்லை என்றால் சரிதான். அரசு அலுவலக கோப்பில் பெயரை திருத்தம் செய்தால் பராமரிக்கும் அதிகாரி கையொப்பமோ முத்திரையோ இல்லை என்றால் சரிதான். வருகை பதிவேடு ஆண்டு ஒன்றுக்கு பராமரிக்கப்படும் என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்துள்ள வருகை பதிவேடு முழுமையாக இல்லை என்றால் சரியல்ல. எதிரி உங்கள் அலுவலகத்தில் வேலை செய்வதால் அவருக்கு ஆதரவாக ஆவணங்களை தயார் ெய்து எடுத்து கொண்டு வந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.